அ.வ.எண் : 100/2011 C/w.O.S.325/2008

தேதி : 12. 02. 2020

பெயர் : தீரன்

நேரம் : பிற்பகல் 12.47 முதல் 01.03

<u>வா.சா.1 குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்துக்களை என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்துக்களாகும். என் தாத்தாவிற்கு 3 மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளனர். என் தாத்தா அவரின் காலத்திற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகள் யார் யார் எப்படி அடைய வேண்டுமென்று ஒரு உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் தாவா சொத்து ரத்தினகுமார் என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டு அவருக்கு பின்னிட்டு அவரின் வாரிசான தங்கதுரை என்பவர் அனுபவிக்க வேண்டி எழுதப்பட்டது. தங்கதுரைக்கு தனியாகவும் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது. என் தாத்தாவின் வாரிசுகளான அம்பிகா , மாணிக்கம் என்பவர்களுக்கு தனித்தனியாக சொத்து உயில் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் எழுதும் போது ரத்தின குமாருக்கு திருமணம் நடந்திருந்ததா என்றால் திருமணம் நடந்திருந்தது. ஆனால் ரத்தினகுமார் என்பவருக்கு திருமணத்திற்கு பின் ஆண் வாரிசுகள் யாரும் கிடையாது பெண் வாரிசுகள் இருந்தார்கள். மேலும் உயில் எழுதும் போது என் தாத்தா ரத்தினகுமார் என்பவருக்கு உயில் மூலம் தாவா சொத்தினை எழுதும் போது ரத்தினகுமார் என்பவருக்கு அனுபவித்து வந்து அவருக்கு ஆண் வாரிசுகள் இருப்பின் அவர் அனுபவித்துக்கொள்ள வேண்டியது, இல்லாத பட்சத்தில் தங்கதுரை என்பவர் அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி உயில் ஏ1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏ1

ஆவணத்தில்  ரத்தினகுமார் மற்றும் அவரின் மனைவி வயிற்றில் பிறக்கும் ஆண் சந்ததிக்கு மட்டும் பாத்தியம் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆண் வாரிசுகள் இல்லாததால் , 2ம்பிரதிவாதி பாலமுருகன் என்பவரை தத்து எடுத்துக்கொண்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேலும் தாவாவில் தத்து எடுத்த விவரத்தை நான் தெரிவித்துள்ளேன். இந்து வாரிசுரிமை சட்டப்படி பெற்றோர்கள் இறந்தபின்னிட்டு அவரின் மகன் மற்றும் மகள்கள் முதல் வகுப்பு வாரிசு என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தத்து எடுப்பு சட்டப்படி தத்து எடுத்த குழந்தையும் இந்து வாரிசுரிமை சட்டப்படி வாரிசு தான் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).